2. உரிமை மீறல் பிரச்சினைகள்.

(அ) ''தினமணி'' நாளிதழ் மீது—பேரவைத் தலைவர் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் '' தினமணி '' நாளிதழின்மீது ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இது எவ்வாறு அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாதம் 21 ஆம் தேதியன்று சமூக நலத் துறை மானியத்தில் நான் அவையில் பேசிய அந்தப் பேச்சு சம்பந்தமாக என்னுடைய அவை நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் பிரசுரிக்கின்றபொழுது நியாயமாகவும், உண்மையாகவும் முடிந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்பது அவசியம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். சபையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டவர்களது பேச்சுக்களை அவ்வளவும் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பிரசுரிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. அதே போன்று ஒருவர் பேச்சை அதிகமாகவும், இன்னொருவர் பேச்சைக் குறைவாகவும் பிரசுரிப்பது அவையை அவமதித்தது ஆகும் என்று கூட நான் கூறவில்லை.

ஆனால் விவாதத்தைப் பிரசுரிக்கின்றபொழுது ஒரு சிலர் பேசுவதை மட்டும் பிரசுரித்து, சிலர் பேசுவதை முற்றிலும் இருட்டடிப்பு செய்வது, அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்கள் என்பதைக்கூடக் குறிப்பிடாமல் இருப்பது அவை நடவடிக்கையைத் திரித்துக் கூறுவதாகும்; உண்மையாகப் பிரசுரித்தது ஆகாது என்பது மட்டுமல்ல; விவாதத்தைப்பற்றி ஒரு தவறான தோற்றத்தை உருவாக்கும். இது அவையை அவமதித்தது ஆகும் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, நான் ஒரு மாதர் இயக்கத்தில் பங்கு கொண்டவள் என்ற முறையில் சமூக நலத் துறையில் பெண்களைப் பற்றி, குழந்தைகளைப் பற்றி நடந்திருக்கக்கூடிய விவாதத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்ற ஒரு சித்திரத்தையும் ஏற்படுத்தும்.

பொதுவாக, பத்திரிகைமீது இப்படிப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வருவதில் எனக்கு வருத்தம்தான். ஆனால், பத்திரிகைகள் முறையாக ஓரளவுக்கு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தவே இதை நான் கொண்டு வருகிறேன்.

1989 மே 12] [திருமதி பாப்பா உமாநாத்]

அதுமட்டுமல்ல, பத்திரிகை மீது தடுப்புச் சட்டங்கள் எல்லாம் வந்தபோது அதை எதிர்த்து முறியடிக்கக்கூடிய கட்சியைச் சார்ந்தவள் நான் என்ற முறையிலும், நான் இந்த நேரத்திலே இப்படிப்பட்ட முறையில் அவையில் இனிமேல் நடக்கக்கூடாது என்ற கருத்தோடும் இந்த உரிமை மீறல் பிரச்சினையை உங்கள் முன்னால் கொண்டு வந்து, இதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உரிமை மீறல் பிரச்சினை மீது ''தினமணி'' நாளிதழ் ஆசிரியரின் விளக்கத்தைக் கேட்டபோது அவர் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

''...21—4—89 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சமூக நலம், ஊரகத் தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்தில் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பேசிய கருத்துக்கள் தினமணியைத் தவிர முரசொலி, தினகரன் ஆகிய தமிழ் நாளேடுகளிலும், ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய ஆங்கில நாளேடுகளிலும் பிரசுரிக்கப்படவில்லை. மேலும் பல நாளேடுகளில் இச்செய்தி முற்றிலும் விடுபட்டோ அல்லது அரைகுறையாக பிரசுரிக்கப்பட்டோ உள்ளது என்றும் தெரிய வருகிறது. இந்த நாளேடுகள் மீதும் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் உரிமை மீறல் அறிவிப்பைக் கொடுத்துள்ளாரா என்றும், கொடுக்கவில்லையெனில் இவ்வாறு தினமணி மீது மட்டும் ஒருதலைப்பட்சமான உரிமை மீறல் அறிவிப்பு ஏன் கொடுக்கப்பட்டது என்றும் அதையேற்று எங்களிடம் மட்டும் விளக்கம் ஏன் கோரப்பட்டுள்ளது என்றும் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

சட்டமன்றப் பேரவையில் அன்றாடம் நிகழும் விவாதங்கள் அனைத்தையும் பத்திரிகைகள் பிரசுரித்துத்தான் ஆக வேண்டும் என்ற சட்டமோ, மரபோ, வழக்கமோ இல்லாத நிலையில் இந்த விஷயத்தில் உரிமை மீறல் என்ற பிரச்சினைக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'அவை உரிமை மீறல்' என்ற பிரச்சினையே எழாத நிலையில் தினமணி இந்த விஷயத்தில் சட்டப்படி விளக்கம் எதுவும் அளிக்கத்தேவையில்லை என்றாலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மீதும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மீதும் நாங்கள் கொண்டுள்ள மதிப்பையும், மரியாதையையும் முன்னிட்டு எங்கள் நிலையை விளக்கித் தங்கள் கடிதத்திற்குப் பதில் அளித்திருக்கிறோம்.''

1977 ஆம் ஆண்டு மாலை முரசு நாளிதழ் மீது இம் மாதிரியான பிரச்சினை எழுப்பப்பட்டபோது பேரவைத் தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பினை அளித்துள்ளார்கள்:

''உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதுபோல் சில உறுப்பினர்களது சொற்பொழிவுகளைப் பற்றி எந்தவிதத்தில் சுருக்கியோ அல்லது பங்குகொண்டார்கள் என்ற குறிப்போ இல்லையென்றும், இது போல் வேண்டுமென்றே வெளியிட்டுவிட்டு உரிமைப் பிரச்சினை வருகிறபோது தங்களுக்கு அதுபோன்ற எண்ணம் இல்லையென விளக்கம் அளிப்பது பத்திரிகை சுதந்திரத்திற்கே முரணானது என்றும், இப்பிரச்சினையில் மாலை முரசு நாளேடு அவையின் உரிமையை மீறி உள்ளது என்றும், பேரவை தனது கண்ணியத்தைக் கருதியும், பரந்த நோக்கத்தினாலும் இதுபோன்ற உரிமை மீறல்களைப் பொருட்படுத்துவதில்லை என்பதனால் இதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு அவையினது உரிமையை மீறுவது முறையாகாது என்றும், அவை நடவடிக்கைகளை பத்திரிகைகள் வெளியிடும்போது எழுத்துக்கு எழுத்து வெளியிட முடியாது என்றாலும் வெளியிடப் பெறுவது, அவையினது நடவடிக்கைகளைக் குறைத்துக் கூறாமல் முழுமையாக அதனது கருத்தை அல்லது சுருக்கத்தை வெளியிட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பெற்ற ஒரு மரபாகும்.'' இந்தப் பழைய தீர்ப்பை இப்பொழுது நான் மேற்கோள் காட்டவிரும்புகிறேன்.

இந்தத் தீர்ப்பு தற்போதும் பொருந்தும் என்பதால் அதை நினைவு கூர்ந்து, நாளிதழ்கள் இதைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கிறேன்.

(ஆ) ''மேனேஜ்மெண்ட் புரபஷனல்ஸ் அசோசியேஷன்'' என்ற நிறுவனத்தைச் சேர்ந்த சுதர்சன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் திரு. ஜே. சுதர்சன் என்ற ஒரு நபர் மீது உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிவிப்பைக் கொடுத்துள்ளார்.

இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்று மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS